**ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் (“கம்பனி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதி கூற்றில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை இலக்கம் 2.3.8 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இறுதி பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்ற முறைமை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 65,507,108 கிரயமான மோட்டார் | மோட்டார் வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரை பொறியியலாளர் பிரிவின் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே அதிகரிக்கப்பட்டிருந்தது. இதில் சில வாகனங்கள் 05 வருடங்களை விஞ்சி இருந்ததுடன் எதிர்வரும் | சொத்துக்கள் மீளாய்வு சபையினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரையான சொத்துக்கள் மீளாய்வுக் குழுவழனட பரிந்துரை இன்றி அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனிக்கு சொந்தமான ரூபா 58,432,733 கிரயமான ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீட்டு கொள்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மீளாய்வு சபையினால் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடங்களில் போதும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமையினால் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சொத்துக்களை மீளாய்வு சபை ஒன்றை ஸ்தாபித்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து 2014 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2019 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய ரூபா 6,337,204 தொகையான களஞ்சிய கட்டணம், முன்னைய ஆண்டுகளின் போது பெறவேண்டியிருந்த களஞ்சிய கட்டணங்களாக இனங்காணப்படாத வருமானங்கள், மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டமையின் காரணமாக நடப்பாண்டின் இலாபம் ரூபா 6,337,204 இனால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் வாசகர்களுக்கு இனங்காணப்படக்கூடிய பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் தேவையான பிரகாரம் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் எமது நிறுவனம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமையினால் எஞ்சியிருந்த எண்ணெய் இருப்புக்களுக்காக எமது நிறுவனத்தினால் அந்தந்த வருடங்களின் பட்டியல்களை விநியோகிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டின் போது எமது நிறுவனத்திற்கு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் கடந்த வருடங்களுக்குரிய களஞ்சிய கட்டணத்தைச் செலுத்துவதற்கும், மீண்டும் எமது நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி இந்த பட்டியல்கள் 2020 ஆம் ஆண்டின் போது விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை வாசகர்களுக்கு அறியக்கூசுடிய வகையில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 28,268,536 ஆக காண்பிக்கப்பட்ட இருந்த போதும் அதில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அதிகார சபையினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 26,947,624 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா 1,320,912 நிலுவையொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாடு 2018 திசெம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை துறைமுக அதிகார சபை ஊடாக லங்கா மெரிடைம் சேரிவிஸ் கம்பனியிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 756,306 தொகையினையும், 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 544,684 தொகையினையும் உள்ளடக்கி இருந்தது. இந்த பணத்தை அறவிடுவதற்காக தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கோ அல்லது தேவையான பிரகாரம் நிதி ஏற்பாட்டை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் இந்த நிறுவனம் தொடர்பான அறிக்கை ஒன்று நிதி பிரிவின் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது பணிப்பாளர் சபையின் தீர்மானமாக அந்தப் பணம் எவ்வளவோ அதனை உரிய கம்பனிகளில் இருந்து அறவிடுமாறு இருந்தது. மேலும் வியாபார அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் தலைவருக்கு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கை | | | |
| (i) 3.1 ஆம் பிரிவு | நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பணிப்பாளர் சபையினால் நியதிச்சட்ட பொறுப்புகள் மேற்கொள்ளவேண்டி இருந்த போதிலும், ஜய கொள்கலன் இறங்குதுறை கம்பனியில் 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது ஊழியர்களை சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல், ஓய்வுபெறச் செய்தல் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தலைவருக்கு கையளிக்கப்பட்டு இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், 2021 ஏப்ரல் 09 | 2021.02.25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தலைவருக்கு ஊழியர்களை சேர்த்தல், ஓய்வுபெச் செய்தல், சேவையை முடிவுறுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக 2011.08.29 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது. அதன் போது அந்த அதிகாரத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்படாத நடவடிக்கைகளின் அதிகாரம் பூச்சியமாக்குதல் மற்றும் இரத்துச் செய்யதல் தீமானமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. | கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக கட்டுப்பாட்டு சபை பொறுப்பு வகிக்க வேண்டி இருந்தமையினால் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் திகதி வரையிலும் அந்த தீர்மானத்தை சரி செய்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 5.1 ஆம் பிரிவு | கம்பனியின் எதிர்கால நோக்கை காண்பிக்கும் வகையிலும், பொருத்தமானதாகவும் மற்றும் அடையக் கூடியதுமான இலக்குகளை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பக்கம் 20 - 21 இல் நிறுவனத்தினால் குறுங்கால மற்றும் நீண்டகால எதிர்வரும் 05 வருடங்களை உள்ளடக்கி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான திட்டம் ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை நிறுவனத்தின் எதிர்வரும் 05 வருடங்களில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நீண்டகால நோக்குடன் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (iii) | 8.2.2 ஆம் பிரிவு | அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனி ஒன்றினால் குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புகள் அல்லது ஏனைய நிதி முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாயின் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு (Concurrence) பெற வேண்டி இருந்தபோதிலும் 2020 திசெம்பர் 31 | நிறுவனத்தினால் சகல மிகைப் பணமும் இலங்கை வங்கியில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்புகள் யாவும் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வைப்புகளாகும். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வைப்புக்களுக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கம்பனி ஒன்றின் மிகைப் பணத்தை முதலீடு செய்யும்போது உரிய இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 185,420,331 தொகையான முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | 9.2 ஆம் பிரிவு | சகல அரசாங்க தொழில் முயற்சி ஒன்றினாலும் நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும், கம்பனி மேற்கூறப்பட்ட தேவையை நிறைவேற்றி வைக்கவில்லை. | ஆலோசனையாளர் ஒருவரை தெரிவு செய்து நியமிப்பதற்காக நியமிக்கப்பட்ட பெறுகை குழு ஊடாக ஆலோசனையாளரை நியமித்து நிறுவன கட்டமைப்பு திட்டம் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை என்பன பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வளம் தொடர்பாக இந்த தேவையினை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | 9.3.1 ஆம் பிரிவு | கம்பனிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை தயாரித்து அதற்காக பணிப்பாளர் சபையினதும் வரிசை அமைச்சினதும் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனையாளர் ஒருவரை தெரிவு செய்து நியமிப்பதற்காக நியமிக்கப்பட்ட பெறுகை குழு ஊடாக ஆலோசனையாளரை நியமித்து முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், தும் வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | முறையானதும் வெளிப்படையானதும் ஆன மனிதவள முகாமைத்துவத்திற்காக ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்றை தயாரித்து பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். |
| (vi) | 9.9 ஆம் பிரிவு | மேவுகை அங்கீகாரம் (Covering sanction) | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை | மேலதிக கொடுப்பனவுகளுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு மாதத்திலும் மேலாதிக நேர கொடுப்பனவுகளுக்குரிய சகல விபரங்களும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 26,915,745 தொகையான மேலதிக நேர கொடுப்பனவுகளுக்குரிய விரிவான தகவல்கள் மாதாந்தம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | கு உரிய விரிவான தகவல்களும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (vii) | 9.12 ஆம் பிரிவு | கம்பனி அமுல்படுத்தும் எந்த ஒரு நலன்புரி உத்தேச திட்டங்களுக்காகவும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் உரிய அங்கீகாரம் பெறாமல் கம்பனியால் அமுல்படுத்தப்படுகின்ற வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மருத்துவ பட்டியல்கள் செலுத்தும் முறைமையின் கீழ் மீளாய்வாண்டின் போது ஊழியர், வாழ்க்கை துணைவியர் மற்றும் அதில் தங்கியிருப்பவர்களுக் | 2017.05.30 ஆம் திகதிய கடிதத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஜய கன்டைனர் டேர்மினல் லிமிடெட் இன் ஊழியர்களுக்காக மருத்துவ உதவி திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட இணக்கப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நலன்புரி உத்தேச திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கு வருடாந்தம் ரூபா 200,000 வீதம் ரூபா 600,000 வரை ரூபா 2,690,880 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 1954 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 1954 இன் 19 ஆம் இலக்க மற்றும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் I ஆம் பகுதியின் 3 மற்றும் 7 ஆம் பிரிவுகள் | ஏதாவது ஒரு நிறுவனத்தின் ஊழியரை சுழற்சி முறையில் சேவையில் ஈடுபடுத்துவதாயின் நாளொன்றுக்கு ஆகக்கூடியது 08 மணித்தியாலங்களுக்கும், வாரத்திற்கு 45 மணித்தியாலத்திற்கும் வரையறுக்க வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 46 ஊழியர்களுக்கு 24 மணித்தியாலங்கள் வேலை தவணைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | கம்பனியின் சேவை தேவையின் பிரகாரம் 24 மணி சுழற்சி சேவை நடவடிக்கைகளை செயற்திறனாகவும் இடையூறு இன்றியும் மேற்கொள்ளவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 24 மணித்தியால சுழற்சி சேவை முறையை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக 2021.02.25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. | கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கான தேவைகளை கண்டறிய வேண்டும். |
| (இ) | 2014 சனவரி 06 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு. | கம்பனி முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் பதவியணியினர் மற்றும் உரிய சம்பளம் தீர்மானிக்கப்படாத நிறுவனம் ஒன்றாக இருந்தமையினால் வாழ்க்கைச் செலவு படிகள் உரித்தற்ற நிறுவனமாக இருந்தபோதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் ரூபா 7,800 | வாழ்க்கைச் செலவு படி வழங்குவதற்காக 2018 மே 03 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளருக்கு 2018.02.16 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் உரிய வரிசை அமைச்சர் 2018.02.23 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீதம் 95 ஊழியர்களுக்காக வாழ்க்கைச் செலவு படி செலுத்தப்பட்டிருந்தது. | ஆம் திகதி பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி இதற்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கம்பனி விஞ்ஞாபனத்தின் 4(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகள் | கம்பனியின் விஞ்ஞாபனத்தின் 4 (i) மற்றும் (ii) பிரிவின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையில் சேவையாற்றுகின்ற ஆறு உத்தியோகத்தர்களினால் கம்பனியில் இருந்து விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் ஒரு பங்கு வீதம் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அவ்வாறே கம்பனியின் பங்குகளுக்கு உரித்துள்ள உத்யோகத்தர் அதிகார சபையின் சேவையில் இருந்து விலகிச் செல்கின்ற போது அதிகாரசபையினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு பங்கு உரித்து கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் சென்ற ஐந்து பேர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பங்குரிமை, அதிகாரசபையில் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்கள் ஐந்து பேர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை | ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் பங்குகள் உரித்தான உத்தியோகத்தருக்கு துறைமுக அதிகார சபையின் சேவையில் இருந்து விலகி செல்லும் போது அதிகார சபையினால் அது தொடர்பாக ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டிற்கு விரைவாக அறிவிக்கும் பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்துமாறு அதிகார சபைக்கு கோரிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்ட 99,993 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் விநியோகித்தல் தொடர்பான பற்றுச்சீட்டுகள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் பங்குகள் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்ட பங்குகளுக்கு உரிய பங்குச் சான்றிதழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பங்கு கையளிக்கும் நடவடிக்கைகள் நாளது வரையாக மற்றும் செல்லுபடித்தன்மை தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சனைகள் ஏற்படும் ஆபத்தை தவிர்க்க முடியாதிருந்தது. மேலும் கம்பனியால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்ட 99,993 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ்களின் பிரதி கணக்கு ஆய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.8 வரி பிரமாணங்களுக்கு இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 1,540,551 ஆக இருந்ததுடன் அதற்குரிய நிறுத்தி வைத்தல் வரி சான்றிதழ் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி பணம் வருமான வரி செலுத்தும் போது கழித்துக் கொள்ளல் தொடர்பாக நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிலையயான வைப்பிற்கான வட்டி கணக்கு வைக்கும்போது நிறுவனத்தினால் அட்டுறு அடிப்படையில் வரி வருமானம் மற்றும் நிறுத்தி வைத்தல் வரி ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் கணக்கீடு செய்யப்படுகின்றது. (2020 இற்கு முன்னர்) எனினும் வங்கியினால் நிறுத்தி வைத்தல் வரிக்காக சான்றிதழ் ஒன்று உரிய காலாவதி திகதியின் பின்னரே விநியோகிக்கபடுகின்றது. வருமான வரி செலுத்தும் போது சான்றிதழ் பத்திரங்களில் காணப்படும் அளவே கழிக்கப்படுகின்றமையினால் 2014 முதல் 2019 வரை ஒவ்வொரு வருடமும் நிறுத்தி வைத்தல் வரி கணக்கில் எதோவொரு பண அளவு மீதியாகின்றது. | வரி பொறுப்பை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த நிறுத்தி வைத்தல் வரிக்காக உரிய சான்றிதழை வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 3200 மெட்ரிக் தொன் களஞ்சியப்படுத்த கூடிய புதிய எண்ணெய் தாங்கி ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் 10 எண்ணெய் தாங்கிகளை மேவுகைசெய்யும் வகையில் தீயணைப்பு முறைமை ஒன்றை பொருத்துவதற்காக இணங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 45,517,357 தொகையை ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்காக கம்பனியால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு மீளாய்வாண்டின் போது பணம் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,371,656 பெறுமதி சேர் வரி (VAT) ஒப்பந்தகாரரினால் விநியோகிக்கப்படுகின்ற வரி பட்டியல்களை பெற்றுக்கொள்ளாமல் இலங்கை துறைமுக அதிகார சபையின் கடித தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட வரி சிட்டையினை அடிப்படையாகக்கொண்டு கம்பனியால் உள்ளீட்டு வரியாக 2020 ஒக்டோபர் மாதத்தின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி பொறுப்பாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கூறப்பட்ட வரித் தொகை ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட வற் (பெறுமதி சேர் வரி) பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2020 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் போது செலுத்த வேண்டிய வற் வரி கணிப்பீடும் உள்ளீட்டு வரியாக குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட ரூபா 3,371,656 தொகையான வற் வரியும் இரண்டு நிறுவனங்களினாலும் உள்ளீட்டு வரியாக இரண்டு தடவை குறைக்கப்பட்டு இருந்தமை கணக்காய்வின் போதும் அவதானிக்கப்பட்டது. | 3200 மெட்ரிக் தொன் களஞ்சியப்படுத்த கூடிய எண்ணெய் தாங்கி ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் எண்ணெய் தாங்கிக்கான தீயணைப்பு முறைமை ஒன்றை பொருத்துவதற்கு உரிய 20 சதவீத முற்பண தொகைக்குரியதாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ரூபா 45,517,357.58 தொகையொன்று 2020 ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்த தொகை துறைமுகத்திற்கு செலுத்தப்பட்டதன் பின்னர் 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி தலைவர் ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட் இனால் துறைமுக அதிகார சபைக்கு கடிதமொன்று அனுப்பி அந்த தொகையில் அடங்கியுள்ள ரூபா 3,371,656.11 வற் (VAT) வரி தொகை JCT நிறுவனத்திற்கு மீண்டும் வழங்குமாறு (refund) கோரியிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த மூலதன செலவினங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக வற் வரித் தொகை இலங்கை துறைமுக அதிகார சபையினாலும் செய்யப்பட்டு, உள்ளீட்டு வரியாக குறைப்பதற்கு (Claim) நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2020.11.05 ஆம் திகதி இந்த செலவினத்திற்கான வரிப் பட்டியல் எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வரிப் பட்டியலின் பிரகாரம் எமது நிறுவனத்தினால் உள்ளீட்டு வரியாக இது கழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறைக்கப்படாது இருக்குமாயின் இந்த வரி தொகையினால் எமது நிறுவனத்தின் செலவினம் மிகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கும். | ஒப்பந்தகாரர் சமர்ப்பிக்கும் வரிப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உள்ளீட்டு வரியை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 12.6 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 92.9 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 80.3 மில்லியன் அதாவது 86 சதவீத வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்காக விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக செலவினங்கள் உயர்ந்து சென்றமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு

| | 2020 (ரூபா) | 2019 (ரூபா) | அதிகரிப்பு (ரூபா) | குறைவு % |
|---|---|---|---|---|
| வருமானம் | **210,560,557** | **283,793,238** | **(73,232,681)** | **25.8** |
| விற்பனைக் கிரயம் | **(123,039,082)** | **(145,548,202)** | **(22,509,120)** | **15.5** |
| மொத்த இலாபம் | **87,521,475** | **138,245,036** | **(50,723,561)** | **36.7** |
| நிர்வாக செலவினம் | **(89,217,343)** | **(83,699,866)** | **5,517,477** | **6.6** |
| செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) | **(1,695,868)** | **54,545,170** | **(52,849,302)** | **96.9** |
| நிதி வருமானம் | **23,809,889** | **43,232,258** | **(19,422,369)** | **44.9** |
| நிதி செலவினம் | **(3,022,544)** | **(1,846,297)** | **1,176,247** | **63.7** |
| செயற்பாடல்லாத வருமானம் | **681,501** | **2,535,504** | **(1,854,003)** | **73.1** |
| வரிக்கு முன் இலாபம் | **19,772,978** | **98,466,635** | **(78,693,657)** | **79.9** |
| வருமான வரி | **(7,177,099)** | **(5,580,987)** | **1,596,112** | **28.6** |
| ஆண்டின் இலாபம் | **12,595,879** | **92,885,648** | **80,289,769** | **86.4** |
| பங்கொன்றின் உழைப்பு | **125.96** | **928.85** | **(802.89)** | **86.4** |

i. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வருமானம் ரூபா 73,232,681 இனால் அதாவது 25.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், செயற்பாடல்லாத வருமானம் ரூபா 1,854,003 இனால் அதாவது 73 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

ii. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நிர்வாக செலவினம் ரூபா 5,517,477 இனால் அதாவது 6.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

iii. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நிதி வருமானம் ரூபா 19,422,369 இனால் குறைவடைந்திருந்ததுடன் நிதிச் செலவினம் ரூபா 1,176,247 இனால் அதிகரித்திருந்தது. அதாவது நிதி வருமானம் 45 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் நிதிச் செலவினம் 63 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது.

iv. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது பங்கொன்றின் உழைப்பு ரூபா 802.89 இனால் அதாவது 86 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|
| i. நடைமுறைச் சொத்து விகிதம் | 12.72:1 | 21.23:1 | 1:0.05 | 1:0.04 | 1:0.04 |
| ii. விரைவுச் சொத்து விகிதம் | 1:0.07 | 1:0.04 | 1:0.05 | 1:0.04 | 1:0.04 |
| iii. மொத்த இலாப விகிதம் | 41.56% | 48.71% | 50% | 55% | 55% |
| iv. வருமானத்தில் செயற்பாட்டு இலாப விகிதம் | -0.80% | 19.22% | 22% | 31% | 29% |
| v. தேறிய இலாப விகிதம் | 5.98% | 31.73% | 32% | 42% | 38% |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. செயற்பாட்டு இலாப வருமானத்தின் சதவீதமாக எடுக்கும்போது 2016 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக அது குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் 0.80 சதவீத மறை பெறுமதி வரை குறைவடைந்திருந்தது.

ii. மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது மொத்த இலாபம் 2016 ஆம் ஆண்டில் 55 சதவீதமாக இருந்ததுடன் அது படிப்படியாக குறைவடைந்து 2020 ஆம் ஆண்டில் 41.56 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டில் 38 வீதமான தேறிய இலாப விகிதம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 5.98 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

iii. 2019 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் 21:1 மற்றும் 1:0.04 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த விகிதம் முறையே 12:1 மற்றும் 1:0.07 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் ஜய கொள்கலன் இறங்குதுறை கம்பனி 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் 02 வருடகாலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட முகாமைத்துவ சேவை உடன்படிக்கை 2019 சனவரி 31 ஆம் திகதி முடிவடைந்த போதிலும் 2021 மார்ச் 22 ஆம் திகதி வரை இந்த உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எமது கம்பனியால் 2020.11.20 திகதி நடாத்தப் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது முகாமைத்துவ சேவைகள் உடன்படிக்கையை புதுப்பிக்கும் போது அதில் உள்ள சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கை 2020.12.23 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் 2020.12.18 ஆம் திகதிய கடிதத்தில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சருக்கு அந்த முன்மொழிவை உள்ளடக்கிய முகாமைத்துவ சேவை உடன்படிக்கையை நாளதுவரையாக்கும் வகையில் அனுப்பப்பட்டிருந்தது. இந்த கடிதத்தின் பிரதிகள் செயலாளர், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு மற்றும் தலைவர் / உபதலைவர், இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையினதும் எங்கள் நிறுவனத்தினதும் முகாமையாளர்களின் பங்குபற்றலுடன் 2021.03.02 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது.<br><br>அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையின் மூலம் இது தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டம் | உடன்படிக்கையை நாளதுவரையாக பேணி செல்வதன் மூலம் சட்ட ரீதியான பிரச்சனைகள் ஏற்படும் ஆபத்தை குறைத்துக்கொள்ள முடியும். |

| | | |
|---|---|---|
| | ஒன்று எதிர்காலத்தில் நடாத்தி இந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த பொறுப்புகள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரியதாகும். | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனதத்திற்குச் சொந்தமான 13 எண்ணெய் தாங்கிகளில் 07 முகவர்களுக்கு சொந்தமான 03 வகையான எண்ணெய்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் முகவர்களினால் தாங்கிகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. தாங்கிகளில் பம்பி இடப்படுகின்ற எண்ணெயின் அளவு மற்றும் அகற்றப்பட்ட எண்ணெயின் அளவை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக சரியாக எண்ணெய் இருப்பை நிர்ணயிக்க முடியாதமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி நடைபெற்ற எண்ணெய் இருப்பு புத்தக மீதிக்கும், பௌதீக மீதிக்கும் இடையே 557 மெட்ரிக் தொன் எண்ணெய் மிகை ஒன்றும் அவதானிக்கப்பட்டது. | எண்ணெய் கைத்தொழிலுக்காக உலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற சகல அளவிடல் முறைகளும் 100 சதவீதம் சரியானதாக இல்லை. அது 0.05 சதவீத அளவினால் வேறுபாடு ஏற்படக்கூடியது. 557 மெட்ரிக் தொன் எண்ணெய் அளவு ஏற்பட்டிருந்தமையானது, அதன் வேறுபாட்டுக்கு மேலதிகமாக HSFO தாங்கியை வெண்ணெய் குழாய்கள் LSFO ஆக மாற்றப்பட்டமையின் விளைவாக ஏற்பட்டிருந்தது. | புத்தக மீதிக்கும் பௌதிக இருப்பு மீதிக்கும் இடையே வேறுபாடுகளை குறைக்கும் வகையில் எண்ணெய் அளவிற்காக தொழில்நுட்ப ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமை ஒன்றை பயன்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |